# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, திசெம்பர் மாதம் 16 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## *2011 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

[*2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. (கூட்டி). 3/2008*

### *ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்*

*முன்னுரை.*

"ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கு இணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புடைய எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக இதற்குமுன்னர் உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் நிறுவப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றத்தில் தற்போது உறுப்பினர்களாக உள்ளவர்கள் அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படுகின்ற கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள்

2-PL 005263-990 (2010/10)

மன்றம்'' என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக் கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக் கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) அலகொலமட ஸ்ரீ ஜயசுமனாராமய, ஸ்ரீ தம்மாதார மகா பிரிவேன, ஸ்ரீ தம்மாதார தம்மப் பாடசாலை மற்றும் மன்றத்துடன் இணைந்த ருவன் சிறுவர் பூங்கா ஆகியவற்றை பராமரித்தலும் ;

(ஆ) அப்பிரதேசத்திலுள்ள வறியவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தலும் திருத்திக் கொடுத்தலும்;

(இ) ஆட்களுக்கு சிகிச்சைக்காக நிதி உதவியளித்தலும் அத்தகைய ஆட்களுக்கு சிகிச்சைக்காக சிகிச்சைக் கூடங்களை ஏற்பாடு செய்தலும் ;

(ஈ) பொதுமக்களின் நன்மைக்காக கலாசார, சமூக, பொருளாதார மற்றும் சமய அபிவிருத்தியை ஊக்குவித் தலும் ;

(உ) நூலகங்களைத் திறப்பதற்கும், கற்கை நெறிகளை நடாத்துவதற்கும் உதவிகளை அளித்தலும் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும் ;

(ஊ) இளைஞர்களின் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்துவதற்காக விளையாட்டு உபகரணங்கள் மற்றும் வேறு வசதிகளை ஏற்பாடு செய்தலும் ;

(எ) வறிய ஏழ்மையுற்ற முதியோர், இயலாதோர் மற்றும் அநாதைச் சிறுவர்களுக்காக வீடுகளை வழங்குதலும் ;

(ஏ) இயற்கை அனர்த்தங்களின்போது ஆட்களுக்கு நிவாரணம் மற்றும் நலனோம்புச் சேவைகளை வழங்குதலும் ;

(ஐ) தொழில்நுட்ப, விஞ்ஞான மற்றும் பொறியியல்துறைகளில் இளைஞர்களுக்கு வெளிநாடுகளில் உயர்கல்விக்கான புலமைப் பரிசில்களை வழங்குதல் ;

(ஒ) தேவையிலுள்ள ஆட்களுக்கு பொழுதுபோக்கு வசதிகளை ஏற்பாடு செய்தலும் ; அத்துடன்

(ஓ) இளைஞர்களுக்காக கைத்தொழிற் பயிற்சியை ஏற்பாடு செய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைச் செயற்படுத்தலானது, இனம், மதம், மொழி, சாதி, பால் அல்லது அரசியல் அபிப்பிராயம் என்பவற்றின் அடிப்படையிலான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுவதனைக் கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைய அதன் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான, எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணங்களைக்கடன் எடுக்கவும் அல்லது திரட்டவும் மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும், சேகரிக்கவும், அதன் நிதியங்களை முதலீடு செய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் தொழிலில் ஈடுபடுத்துதல் தொழிலுக்கமர்த்துதல், பதவி நீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின் ஏற்பாடுகளுக்கும் அமைய முகாமைச் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும். முகாமைச் சபை (இதனகத்துப் பின்னர் ''பணிப்பாளர் தலைமையதிபதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர் தலைமையதிபதியாக இருக்க வேண்டியவரான ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றத்தின் பிரதான மதகுரு, தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் 6 ஆம் பிரிவின்கீழ் கூட்டுத்தாபன விதிகளுக்களுக்கிணங்க தெரிவு செய்யப்படக்கூடியவர்களான அத்தகைய வேறு குழு உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி முகாமைச் சபையின் கூட்டமொவ்வொன்றிற்கும் தலைமை வகித்தல் வேண்டும். முகமைச் சபையின் ஏதேனும் கூட்டத்திற்குப் பணிப்பாளர் தலைமையதிபதி சமுகமளிக்காதவிடத்து தவிசாளர் அத்தகைய கூட்டத்திற்கு தலைமை வகித்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிகளுக்கும் அமைய முகாமைச் சபை அதன் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(4) சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் இருப்பதன் காரணமாக அல்லது அதன் உறுப்பினரொருவர் தெரிவில் அல்லது பதவிப் பெயர் குறித்து நியமித்தலில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் வலிதற்றதெனக் கருதப்படுதலாகாது.

(5) கூட்டத்தின் முதலாவது முகாமைச் சபை இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்த மன்றத்தின் முகாமைச் சபை உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத வாக்குப்பெரும்பான்மை கொண்டு, சபையினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களின் கடமைகளைப் புரிவதற்காகவும், கூட்டுத்தாபனத்தினதும் முகாமைச் சபையினதும் கூட்டங்களைக் கூட்டும்போது பின்பற்றப் படவேண்டிய நடவடிக்கை முறையை குறித்துரைக்கவும் வேறு வகையில் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்யவும், அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குமாக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குகாலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் விதி எதுவும், கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு தவிர திருத்தப்படுதல், அதற்கு எதுவும் சேர்க்கப்படுதல், மாற்றப்படுதல் அல்லது நீக்கப்படுதல் ஆகாது.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, அறுதிமாற்றம், ஒப்பப்பணம், உதவுதொகை அல்லது கட்டணம் என்ற வகையாகக் கிடைக்கப்பெற்ற எல்லாப் பணங்களும் முகாமைச் சபை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இக்கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செலவினங்களும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் அவை எவ்வாறு பெறப்பட்டிருப்பினும் இதன்கண் எடுத்துக்காட்டப் பட்டுள்ளவாறாக அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மாத்திரமே பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் எந்தவொரு பாகமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்கிலாபம், மிகையூதியம் என்ற வகையிலோ அல்லது வேறு வகையிலோ கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படுதலோ கைமாற்றப்படுதலோ ஆகாது.

கணக்குகளும் கணக்காய்வும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வரவு, செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப் பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறே தேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்த கைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத் தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின்

பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*மன்றத்தால் செலுத்தப்பட வுள்ளவையும் மன்றத்திற்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.*

**9**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாக வுள்ள எல்லாத் தனிசுகளும் மன்றத்தால் செலுத்தப்படற்பால னவான ஒப்பப்பணங்களும் உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களைக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம்.*

**10**. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவின், மானியக்கொடையின், கொடையின், இறுதிவிருப்பாவணக் கையளிப்பின் பயனாக அல்லது வேறு வகையாக அதற்கு உரித் தாக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பது டன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக் காகவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்க உள்ள முழுத்தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத் திருக்கப்படலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை முகாமைச் சபையின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன் முகாமைச் சபையின் உறுப்பினர் ஒருவர் மற்றும் செயலாளர் அல்லது முகாமைச் சபையால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆள் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான எச்சாசனத்திலும் பொறிக்கப்படுதலாகாது ; அத்துடன் அவர்கள் தாங்கள் சமூக

மளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்கள் பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுவது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*கலைப்பின் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது ; ஆனால் அத்தகைய ஆதனங்கள், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியிருப்பது எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்